தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 18, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2022
1991, அக்டோபர் 4, வெள்ளிக்கிழமை,

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.''

தான் செய்யத்தக்க ஓர் செயலை அச்செயலுக்கு உரிய நேரத்திலும், இடத்தையும் அறிந்து அதற்குரியவாறு விரைந்து செய்வாராயின் அவரை வெல்ல எண்ணிய பகைவரும் தம் எண்ணத்தை இழந்துவிடுவர்.

I. பேரவைத் தலைவர் அவர்களின் 47-வது பிறந்த நாளையொட்டி வாழ்த்துரைகள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உங்களது 46-வது வயது முடிந்து 47-வது வயதைத் தொடங்குகின்ற நாள். எனவே உங்கள் பிறந்த நாளாகிய மகிழ்ச்சிகரமான இந்நாளில் இந்த அவையின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரது சார்பிலும், உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று போலவே, தாங்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் உங்கள் அரசியல் வாழ்க்கையில் இன்னும் பலப்பல வெற்றிகளைக் கண்டு வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று மீண்டும் இந்த அவையின் சார்பில் உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று தங்களுடைய 47-வது பிறந்த நாளில் பேரவையின் சார்பில் அத்தனை நபர்களுடைய சார்பிலும் உங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியின் சார்பில் நாங்களும் உங்களுடைய 47-வது பிறந்தநாளில் எங்களுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டப் பேரவைத் தலைவராக நீங்கள் இருக்கின்ற இந்தக் காலத்தில், சட்டப் பேரவையில் பல நல்ல மரபுகளை ஏற்படுத்தி, ஒரு நல்ல சட்டப் பேரவைத் தலைவராக விளங்குவதற்கான மரபுகளை ஏற்படுத்தி, நீங்கள் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்று நான் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தங்கள் வாழ்க்கையில், தங்கள் அரசியல் வாழ்க்கையில், மேலும் பல சிறப்புகளைப் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள் என்பதை, சாதாரணமாக நான் எந்த நேரத்திலேயும் நினைத்து, விழா கொண்டாடுகிற வகையிலோ அல்லது அதை நினைத்து இதை ஒரு பெரிய சிறப்பாக எடுத்துக்கொள்கிற வகையிலோ, இதுவரையிலும் நான் என்றைக்கும் என்னுடைய வாழ்நாளில் அமைத்துக் கொண்டதில்லை. ஒரு 46 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குக்கிராமத்தில் இந்த நாளில் பிறந்தேன் என்பதைத் தவிர செயற்கரிய பல காரியங்களைச் செய்து மறைந்து இருக்கிற பல பெரியார்களுடைய பிறந்த நாட்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நமக்கு இது ஒரு பெரிய சிறப்பான நாள் என்று நான் கருதியதில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களே, என்னை வாழ்த்துகிற இந்த நல்ல வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன் என்று சொன்னால் (மேசையை தட்டும் ஒலி) அதுதான் இந்த 46 ஆண்டுகளில் நான் பெற்றிருக்கிற பேறுகள் அத்துனையிலேயும் சிறந்த பேறு என்று நான் கருதுகிற சூழ்நிலையில் இருக்கிறேன். அந்த வகையில், என்னை இந்த அளவிற்கு உயர்ந்த இடத்தில் அமர்த்திய புரட்சித் தலைவி அவர்களே, இன்றைக்கு வாழ்த்துகிற வாய்ப்புப் பெற்று இருப்பது எதிர்காலத்தில் நான் என்ன வாய்ப்புப் பெற்றாலும் அது அவர்கள் இன்றைக்கு இருந்து வாழ்த்திய இந்த வாழ்த்துரைக்கு மிகுதியாக இருக்காது என்று நான் கருதுகிறவன். அந்த வகையிலே, இந்த உயர்வுக்கெல்லாம் காரணமான புரட்சித்தலைவி அவர்களுக்கே என்னுடைய இந்த வாய்ப்பு பெற்றதற்கான நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 9.35

2. வினாக்கள் - விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **வினாக்கள்-விடைகள்: வினா எண். 148. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.**